[26th October 1957

Sri N. K. Palanisami : ஸார், சர்க்கார் இரண்டு மாதத்திற்கு முன்னால் இந்த மாதிரி வைத்திய இலாகாவிலுள்ளவாகள் மேல் படிப்புக்கு போய் அதிக நிபுணத்துவம் பெற வெளி நாடுகளுக்கு அனுப்பக்கூடாது என்று ஒரு ஜி.ஓ. போட்டிருப்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா ?

Mr. Speaker : இந்த கேள்விக்கு பதில் அவசியமில்லை என்று கருதுகிறேன்.

Examination of Neiveli Lignite by United States Bureau of Mines

* 4 *Q.*—**Sri N. K. Palanisami** : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether the lignite available in South Arcot has been sent to America; and

(*b*) if so, the results thereof?

The Hon. Sri R. Venkataraman : (*a*) Yes, Sir. Samples of lignite found in South Arcot district were sent to the United States Bureau of Mines, Washington.

(*b*) The preliminary report received from the United States Bureau of Mines revealed that South Arcot lignite was chemically similar to the high moisture lignites found in the United States and that it had some physical properties similar to Australian brown coals; that it should be possible to make briquettes from a mixture of partially dried lignite and high volatile char and that briquettes made from lump char with pitch binder could be carbonised to produce briquettes that might be strong enough for use in short shaft blast furnances or wrought iron cupolas. The Bureau has stated that further research in this regard would have to be made. Their final report is awaited.

Sri N. K. Palanisami : இதில் சர்க்கார் மேற்கொண்டு என்ன நடவடிக்கை எடுக்கப்போகிறார்கள் ?

The Hon. Sri. R. Venkataraman : நான் பதிலில் கூறியபடி அமெரிக்காவுக்கு அனுப்பியதில் முதல் ரிப்போர்ட்டு வந்திருக்கிறது. இதை தவிர வேறு நாடுகளுக்கும் அனுப்பப்பட்டிருக்கிறது. ஜெர்மனியிலும் லிக்னைட் உபயோகப்படுத்தப்பட்டு வருவதாக தெரிகிறது. ஜெர்மனிக்கும் பழுப்பு நிலக்கிரியை அனுப்பி அதனுடைய ரிப்போர்ட்டையும் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம்.

Sri A. Govindasamy : இந்த பழுப்பு நிலக்கரியைக் கொண்டு மின்சாரத்தை மாத்திரம்தான் உண்டுபண்ண முடியுமா ? ஸ்டீல் உருக்கு போன்றவைகளுக்கும் பயன்படுத்த முடியுமா ?

The Hon. Sri R. Venkataraman : இந்த பழுப்பு நிலக்கரியை வைத்து மின்சார உற்பத்தியும் செய்யமுடியும். இரும்பு உருக்கு போன்றவைகளுக்கு உபபோகப்படுத்த ஜெர்மனியில் ஒரு திட்டம் இருக்கிறது. அதையும் கொண்டு வரவேண்டுமென்று ஆலோசிக்கப்பட்டு வருகிறது.

Sri S. Lazar : இந்த அமெரிக்க நிபுணர்களின் ஆராய்ச்சியின்படி ஏற்கனவே பல திட்டங்களுக்கு நிலக்கரியை உபயோகப்படுத்தி வருவதாக தெரிகிறது. வேறு எத்தாவது முறைகளில் பயன்படுத்த எதாவது திட்டம் இருக்கிறதா என்பதை தெரிய ஆசைப்படுகிறேன்.

26th October 1957]

THE HON. SRI R. VENKATARAMAN : நமக்கு தேவையான இரும்பு, எ.ஃகு உருக்கு போன்றவைகள் கிடைப்பதற்கு வேண்டிய எல்லா முயற்சிகளும் எடுக்கப்பட்டு வருகிறது.

SRI M. P. SUBRAMANIAM : கனம் அமைச்சர் அவர்கள் சொன்ன பதிலில் இதுவரை அரசாங்கத்திற்கு தெரிந்தவைகளைத்தான் இந்த அமெரிக்காவிலிருந்து வந்த ரிப்போர்ட்டும் தெரிவிக்கிறது. இதை தெரிந்துதான் அதற்கு தக்கபடி திட்டமும் போடப்பட்டிருக்கிறது. ஆனால் மீண்டும் அமெரிக்காவிலிருந்தும் ஜெர்மனியிலிருந்தும் ரிப்போர்ட்டுகள் எதிர்பார்க்கப்படுகிறது என்று சொல்லுவது உண்மையிலேயே இந்த திட்டங்களை அமுல் நடத்துவதற்கு காலதாமதப்படுத்துவதற்கான அறிகுறிகள் என்றே காணப்படுகிறது. ஆகவே இவ்விதமில்லாமல் மேற்கொண்டு உடனடியாக நடத்துவதற்கு தடை எதும் இருக்காதல்லவா ?

THE HON. SRI R. VENKATARAMAN : அறிவு எவ்வளவு தூரம் கூடுதலாக வளருகிறதோ அவ்வளவு தூரம் நாட்டுக்கு நல்லது. இதுவரை வந்த ரிப்போர்ட்டுகளின்படி பல திட்டங்கள் போடப்பட்டிருக்கிறது. மேல் கொண்டும் இன்னும் கூடுதலாக இதை எவ்விதமாக பயன்படுத்தலாம் என்று கவனித்துக்கொண்டிருக்கிறோம்.

Mobile Registration

* 5 *Q.*—SRI V. K. RAMASWAMY MUDALIYAR : Will the Hon. the Minister for Electricity be pleased to state—

(*a*) whether the Government have examined at any time the feasibility of introducing the system of Mobile Registration in each district; and

(*b*) if so, with what result?

THE HON. SRI V. RAMIAH : (*a*) No, Sir.

(*b*) Does not arise.

District Boards and Municipalities

* 6 *Q.*—SRI S. PAKKIRISAMI PILLAI : Will the Hon. the Minister for Local Administration be pleased to state whether there is any proposal to amend—

(i) the Madras District Boards Act, 1920;

(ii) the Madras District Municipalities Act, 1920; and

(iii) the Madras City Municipal Act, 1919?

THE HON. SRIMATHI LOURDAMMAL SIMON : Yes, Sir.

SRI S. PAKKIRISAMI PILLAI : மெட்ராஸ் ஸிட்டி முனிஸிபல் ஆக்ட் திருத்த வேண்டுமென்று கோரிய சென்னை கார்ப்பரேஷன் கௌன்ஸில் இங்கே அரசாங்கத்திற்கு பல வருஷங்களுக்கு முன்னாலேயே தீர்மானம் அனுப்பி வைத்திருக்கின்றது. ஆனால் அதைப்பற்றி கேட்கும் போதெல்லாம் மந்திரி சபையின் கவனத்தில் இருக்கிறது, அரசாங்கம் கவனித்துக்கொண்டிருக்கிறது என்றுதான் பதில் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். எந்த தேதிக்குள் இதை திருத்தி அமைக்கப்படும் என்று மந்திரி அவர்கள் கூறுவார்களா ?

THE HON. SRIMATHI LOURD AMMAL SIMON : இதை உடனடியாக எந்த தேதிக்குள் அமைக்கப்படும் என்று சொல்ல முடியாது. இதில் ஒரு அமெண்ட்மெண்ட் பில் இப்பொழுதே கொண்டுவரப்படுகிறது என்று சொல்லிக்கொள்கிறேன்.